சென்று அவர்களைப் பிடிப்பதற்கு சட்டமில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அதற்கு வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற பேர்வழிகளைப் பிடிப்பதற்கு பொதுவான ஒரு சட்டத்தினை இயற்றி, காவல்துறையினர் அங்கு சென்று, அவர்களைக் கைது செய்ய முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் குறிப்பிட்டது ஒரே கருத்தைத்தான். கேரள மாநிலத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை வனத் துறையினுடைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக அந்தப் பகுதியிலே இருக்கிற கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டும் என்று இந்த அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8, திருமதி கே. மரியம்உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

8—

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துதல்.

*9846—திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு விடுமுறை நாட்களிலே பொது மக்கள் பெரிதும் செல்வதற்கு வசதியாக, அதிக அளவில் பஸ்கள் விடப்படுமா ? மேலும் அந்த அறிஞர் அண்ணா உயிரியல

1992 செப்டம்பர் 21]

பூங்காவைப்பற்றி பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் வகையில் செய்திப்படம் தயாரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் வரலாற்றைப் படைத்த நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிற அந்த அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பிறகு, அதற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்யலாம் என்று ஆணை பிறப்பித்து உத்திரவிட்டிருக்கி றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பணிகள் இப்போது விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்தைப் பற்றிக் கேட்டார்கள். அந்தப் பகுதியிலேயிருந்து 16 வழித் தடங்களில் பொது மக்கள் செல்வதற்கு இன்றைக்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 9, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

9—

மேலப்பாளையத்தில் நூற்பாலை

*9341—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதியை தொழிலில் பின்தங்கிய தொகுதியாக கடந்த சட்டமன்றத் கூட்டத் தொடரில் அறிவித்த நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பாளையங்